பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 வைகாசி 11 ஆனி 17 இதழ் 103
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 25-5-78

# இந்திராவைக் கொலைசெய்ய கருணாநிதி சதிசெய்தாராம்!

## 135 பேர்மீது குற்றப்பத்திரிகை தாக்கல்

சென்னை, மே 24 முன்னாள் இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியை கொலைசெய்ய சதித்திட்டம் திட்டியதாகவும் கொலைசெய்ய முயற்சி செய்ததாகவும் முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதியுடன் 135 பேர் மீது தமிழ்நாடு பொலிசார் இன்று சென்னை மெட்ரோ பொலிட்டன் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல்செய்தனர்.

திரு. கருணாநிதியுடன் தி. மு. க. பொதுச்செயலாளர் பேராசிரியர் அன்பழகன், சாதிக்பாட்சா,

(6-ம் பக்கம் பார்க்க)

# இளைஞர்கள் 23 பேரும் தடுப்புக் காவலில்!

## காசி ஆனந்தன் இன்று சரணடைவார்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு கொண்டுவரப்பட்ட இளைஞர்கள் 23 பேரும் பொலிசாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று இரகசியப்பொலிஸ் அதிகாரிகளினால் விசாரணை செய்யப்பட்டதாகவும் பின் அரசாங்க உத்தரவின் பேரில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

நேற்றுமுன்தினம் கோப்பாய் எம் பி திரு. எஸ். கதிரவேற்பிள்ளை வீட்டிலிருந்து [illegible]

பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட இவ் இளைஞர்கள் 23 பேரும் பலத்த பொலிஸ் பந்தோபஸ்துடன் கொழும்புக்கு இரவு 10-30 மணியளவில் கொண்டுவந்து சேர்க்கப்பட்டனர். அதன்பின்பு இவர்கள் பொலிசாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது.

வன்செயல்கள் சம்பந்தமாகவும் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாகவும் பொலிசாரினால் தேடப்பட்டுவருவதாக அறிவிக்கப்பட்டிருந்த 38 இளைஞர்களில் 23 பேர் நேற்றுமுன்தினம் யாழ். எம். பி. திரு. யோகேஸ்வரனும் கோப்பாய் எம். பி. இல்லத்தில் வைத்து யாழ்பொலிஸ் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. ரெரன்ஸ் பெரேராவிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் விசாரணைக்குப் பின் விடுதலைசெய்யப்படுவரா அல்லது விளக்கமறியலில் வைக்கப்டுவரா என்பது இன்னமும் சரியாகத் தெரியவில்லை.

### சட்டங்கள் அமுல்

பயங்கரவாத குற்றங்களையும், வன்முறைகளையும் தடுப்பதற்கென அண்மையில் தேசிய அரசுப் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் நேற்றிரவு முதல் அமுலுக்கு வந்துள்ளன.

பாரிய குற்றம் புரிபவர்களுக்கு கீழ்நீதிமன்றங்களில் பிணை வழங்குவதையும் ஒத்திவைத்த சிறைத்தண்டனை வழங்குவதை

(6ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் பாண் விலை குறைப்பு

(யாழ்ப்பாணம்)

நாடு முழுவதும் இன்று முதல் ஒரு றாத்தல் பாண், 70 சதமாகவும், ஒரு றாத்தல் மா, 72 சதமாகவும் விற்பனை செய்யப்படும்' இது தொடர்பான அறிவித்தல் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், பேக்கரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஒரு றாத்தல் பாண் 74 சதமாக விற்கப்பட்டுவந்தது. புதிய விலைத் திட்டத்தின்படி இன்று முதல் ஒரு றாத்தல் பாண் 70 சதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் பாண், மா ஆகியவற்றின் விலைகள் கொழும்பிலும், யாழ்ப்பா

(6ம் பக்கம் பார்க்க)

சுதந்திரக்கட்சி

## சட்டத்தரணிக்கு சன்சோனியின் அறிவுரை

(கண்டி)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் சன்சோனிக் கமிஷன் முன் ஆஜரான சட்டத்தரணி திரு. சங்கரா நேற்றுத் தமது கட்சியின் சார்பில் சாட்சி ஒருவரை ஆஜர்படுத்தினார்.

பாலதும்பரத் தொகுதியின் முன்னாள் சுதந்திரக்கட்சிப் பேரவை உறுப்பினரின் வீட்டின் அருகிலுள்ள மரம் அரியும் ஆலையில் தொழில்புரிபவரான இற்றம்பலம் இலகுமாரன் என்பவரே அச்சாட்சியாவார்.

சட்டத்தரணியின் குழுக்கு விசாரணையில் இவர் சாட்சிய அளிக்கையில் மேற்படி ஆலையில் சுமார் 22 பேர் வேலை செய்கிறார்கள் என்றும் [illegible]

(6ம் பக்கம் பார்க்க)

கலாபதி ஆள் கொணர்வுமனு

# ஐ.ஜி.பி. யாழ்.பொலிஸ்ஐ.பி. முதலியோருக்கு நோட்டீஸ்

## உயர்நீதிமன்ற விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

வல்வை கலாபதி கைதாகி பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருப்பது தொடர்பான ஆள்கொணர்வு வழக்கில், பொலிஸ் மா அதிபர், திரு. ஸ்டான்லிசேனநாயக்க யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. ரெரன்ஸ் பெரேரா, இரகசிய பொலிஸ்பிரிவு அத்தியட்சகர் திரு. ராஜபக்ஷா ஆகியோரை நீதிமன்றத்தில் ஆஜராகும்படி நோட்டீஸ் பிறப்பிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்படி மனுமீது நேற்று உயர் நீதிமன்றம் விசாரணை ஆரம்பித்தபோது இந்த உத்தரவு விடுக்கப்பட்டது.

வல்வை கலாபதி கைது தொடர்பாக இவரது சகோதரர் தனது சட்டத்தரணிமூலம் உயர்நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல்செய்த ஆட்கொணர்வு மனுமீது நேற்று விசாரணை நடைபெற்றது

உயர்நீதிமன்ற நீதியரசர்களான பத்திரான, விஜயசுந்தர. சர்வானந்தா ஆகியோர் முன்னிலையில் நேற்று ஆட்கொணர்வு மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து இம்மாதம் இருபத்தொன்பதாம் திகதி திங்கட்கிழமை யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. ரெரன்ஸ்பெரேரா, இரகசியப் பொலிஸ் பிரிவு அத்தியட்சகர் திரு. ராஜபக்ஷா. பொலிஸ் மா அதிபர் திரு. ஸ்டான்லி சேனநாயக்கா ஆகிய மூவரையும் உயர்நீதிமன்றத்தில் ஆஜராகச் சொல்லி நொத்தீஸ் (நோட்டீஸ்) பிறப்பிக்குமாறு நீதியரசர்கள் தெரிவித்தனர்.

### ஆட்கொணர்வு மனு

கலாபதியை பொலிஸ் பாதுகாப்பிலிருந்து விடுவித்து, சட்டபூர்வமான பாதுகாப்பில் வைக்குமாறு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என, கலாபதியின் சகோதரர் தாக்கல்செய்திருந்த ஆள்கொணர்வு மனுவில் குறிப்பிட்டிருந்த போதிலும். இக்கோரிக்கையை உயர்நீதிமன்ற நீதியரசர்கள் நேற்று ஏற்றுக்கொள்ளவில்லை.

யாழ். முன்னாள் மேயர் துரையப்பா கொலைவழக்கின் முதலாவது எதிரியும், பிணையில் விடுதலைசெய்யப்பட்டவருமான வல்வையைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் கலாபதி மீண்டும் கைதுசெய்யப்பட்டு நீதவான் முன்னிலையில் இதுவரை ஆஜர்செய்யப்படாமல் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளதை ஆட்சேபித்து கலாபதியின் மூத்த சகோதரரான பாலசுப்பிரமணியம் ஸ்ரீபதி, உயர்நீதிமன்றத்தில் தமது சட்டத்தரணி மூலம் ஆட்கொணர்வு மனுவொன்றை நேற்றுமுன்தினம் தாக்கல்செய்திருந்தார்.

பொலிஸாரால் மீண்டும் கைதுசெய்யப்பட்ட கலாபதி சம்பந்தமாக இவரது சகோதரர் ஸ்ரீபதி. சட்டத்தரணி திரு. அ வி. விவேகானந்தன் மூலமாக உயர்நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவை ஆதரித்து திரு. வி. எஸ். ஏ. புள்ளநாயகம் நேற்று மூன்று நீதியரசர்கள் முன் உரைநிகழ்த்தினார். இம்மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது!

### மனுவில் தெரிவிக்கப்பட்டது

"1975ம் ஆண்டு செப்டம்பர் மாத அளவில் யாழ்மேயர் அல்பிரட் துரையப்பா கொலை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட கலாபதி, இருபது நாட்களவரை இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையாலும் மற்றும் பிறராலும் இம்சிக்கப்பட்டார் விசாரணையின்போது கலாபதி காயமடைந்தார்.

ஒரு காயத்தின் விளைவாக ஒரு காதில் எப்பொழுதும் இரத்தம் கசிந்துகொண்டே இருக்கிறது 1975 செப்டம்பர் முதல் 1976 ஜூலை 26 வரை விசாரணையின்றி பல இடங்களில் கலாபதி தடுத்துவைக்கப்பட்டிருந்தார். 1976 ஜூலை 26 முதல் 1977 மே 12 வரை வெஹாகோர்ட் அட்டாரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். பின்னர் இவர் விடுதலை செய்யப்பட்டபோது

(6ம் பக்கம் பார்க்க)

பிறப்புப் பத்திர விண்ணப்பங்கள்

## துரித விநியோகத்துக்கு அரசாங்க அதிபர் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சுமார் 6,000 பிறப்புப் பத்திர விண்ணப்பங்களைச் சிரமதானம் மூலம் பரிசிலனை செய்து, விநியோகம் செய்யும் வேலையை நேற்று யாழ். அரசாங்கச் செயலக ஊழியர்கள் ஆரம்பித்தனர்.

யாழ். அரசாங்க அதிபர் திரு லயனல் பெர்னான்டோ பொதுமக்களின் வசதிக்காக இப்புதிய திட்டத்தை ஆரம்பித்துள்ளார்.



கடந்த பல மாதங்களாக பிறப்புப பத்திர விண்ணப்பங்கள் பரிசிலனைசெய்யப்படாமல் தேங்கிக் கிடந்து வந்தது. இப்பகுதியில் கடமையாற்றும் ஊழியர் பற்றாக்குறையே இதற்குக் காரணமெனக்கண்டுபிடித்த அரசாங்க அதிபர் இப்புதிய திட்டத்தைத் தயாரித்துள்ளார்.

இச்சிரமதான வேலை 5 நாட்களவரை தொடர்ந்து நடைபெறும். அதன் பின் பிறப்புப் பத்திரங்களுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு 3 நாட்களுக்குள் அறிவிக்கப்படும் (ஈ)

இறக்குமதி செய்யப்பட்ட CITIZEN

மற்றும் கைக்கடிகாரங்களும் கிடைக்குமிடம்

நா. சம்பசிவம் அன் கோ,

யாழ்ப்பாணம்

9347

## வரி விளம்பரம்

### தேவை

யாழ்அணிகலை, அழகுசாதனப் பொருட்கள் முதலியனவற்றில் நன்கு வியாபார அனுபவமுள்ள நற்குணமுடைய விற்பனையாளர்கள் தேவை. ஆங்கில அறிவு விரும்பத்தக்கது. 45, 50 வயதுக்குட்பட்ட காரிச் சாரதி ஒருவர் தேவை. விபரங்களுக்கு: நாதன்ஸ், நவீன சந்தை, யாழ்ப்பாணம், போன். 7540. 9368

ஆர்மினியம் உற்பத்தியாளர்கள், பொலிசர்கள், வேலை பழகியிருப்போர் தேவை. தகுந்த அத்தாட்சிப்பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும். யாழ். உலோகத் தொழிற்சாலை, 250-254, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 9376

கண்ணாடித் தொழிற்சாலைக்கு வேலை பழகுவதற்கு 14 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் தேவை. வேலை பழகும்பொழுது சம்பளத்துடன் வேறு சலுகைகளும் பரிசுகளும் கிடைக்கும். உடனடியாக நேரில் வரவும். 25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 9367

ஊதுபத்தி உருட்டுவதில் அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் உடன் தேவை. எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். அண்ணா இண்டஸ்றீஸ், இணுவில். 9378

### இன்னிசை விருந்து

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நாளை மாலை சங்கீத வித்துவான், சங்கீத ரத்தினம் செல்வி சிவசக்தி சிவப்பிரகாசபிள்ளை இன்னிசை விருந்தளிக்கிறார்.

இராமநாதன் கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் ஆதரவில் இக்கச்சேரி நடைபெறுகிறது. (இ)

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை தென்மேற்கு என்னுமிடத்தைச்சேர்ந்த காலஞ்சென்ற சுலைமான் கண்டு சுல்தான் அப்துல் காதர் என்பவரின் மரண சாதனத்தின் சொத்தின் விடயத்தில்.

இரணமெய்தியவர்

மரண சாதன தியாயாதிக்கம்: பி. ஓ/402.

சுல்தான் அப்துல் காதர் பெண் செய்தம்புநாச்சியா இல. 2 மாவடி வீதி, வண்ணார் பண்ணை தென்மேற்கு. யாழ்ப்பாணம்.

மனுதார்

மற்றும்

சுதான் அப்துல் காதர் அகம்மது ஜமசன், இல. 2 மாவடி வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்தவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978ம் ஆண்டு வைகாசி மாதம் 31ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணமிருப்பின் காட்டுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றனர்.

1978ம் ஆண்டு சித்திரை மீ 4ந் திகதி என்னால் வரையப்பட்டது.

மன்றின் ஆணைப்படி

பி. பாக்கியநாதன்
பதிவாளர்.

(ஒப்பம்)
தா. சங்கரப்பிள்ளை
மனுதாரின் சட்டத்தரணி.
9369

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

## மதுவையும், சினிமாவையும்
# தமிழ்பேசும் தொழிலாளர் கைவிட வேண்டும்

— டாக்டர் பாலசிங்கம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்பேசும் தொழிலாளர்கள் தமது கடமைகளைக் கவனிப்பதுடன் தம் வாழ்க்கையின் பொருளாதாரப் பழுவைக் குறைக்க மது அருந்துதல், படம் பார்த்தல் முதலிய பழக்கவழக்கங்களை விட்டு முன்னேற்றம் காண வழிவகுக்கவேண்டும். இதனால் தொழிலாளரின் பொருள் வளம் ஓங்க அவனது வாழ்வு தனக்கும் தேசத்திற்கும் பயன்படும்.

இலங்கை அஞ்சல் தொலைதொடர்பு உத்தியோகத்தர்கள் சங்க முதலாண்டு தாய்ச்சங்க பொதுக்கூட்டத்தில் தாய்ச் சங்க பொதுக்கூட்டத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் சங்க தலைவர் டாக்டர் எஸ். பாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்:

டாக்டர் பாலசிங்கம் மேலும் கூறியதாவது: ஆகஸ்ட் கலவரத்தின் தமிழ் ஊழியர்கள் பல இடங்களில் பாதிக்கப்பட்டார்கள். தமிழ் ஊழியர்களின் நிலைமை இப்படியாக இருக்கிறது! இதற்கு கடந்த காலத்தில் அங்கம் வகித்த தொழிற்சங்கங்கள் பாராமுகமாக இருந்தன;

இக் கூட்டத்தில் பிரதம விருந்தினர்களாக வைத்திய கலாநிதியும் பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் சங்கத் தலைவருமான திரு. ஏ. பாலசிங்கம், இளைப்பாறிய முன்னைநாள் தபாற்தந்திப்பகுதி நிர்வாகச் செயலாளர் திரு. பி. வன்னியசிங்கம், வடபகுதி தபால் அத்தியட்சகர் திரு. எஸ். பாலசிங்கம், யாழ். தபால் நிலைய அதிபர் திரு. எம். அமிர்தராஜன், சட்டத்தரணியும் முன்னைநாள் அஞ்சல் எழுதுவினைஞர் சங்க ஸ்தாபகருமான திரு. எஸ். சோமசுந்தரம் போன்ற பெரியார்கள் சமூகமளித்திருந்தனர்.

பொதுச்செயலாளர் சென்ற ஆண்டறிக்கையையும் கணக்கறிக்கையும் சமர்ப்பித்துப் பேசினார்.

சட்டத்தரணி எஸ். சோமசுந்தரம் பேசும்பொழுது இக் கூட்டத்தினரைப் பார்க்கும் போது இற்று முன் கூட்டியே இச் சங்கத்தினை ஆரம்பித்திருக்கலாமென்றும் இன்றைய நிலைமை எப்படி இருந்திருக்குமென்றும் அதற்கு காரணமாக அரசாங்க அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தை உதாரணம்காட்டியும் இப்படியான சங்கங்கள் ஏன் வளரவேண்டும் என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகளும் சொல்லி சங்கம் வளரவும் வாழ்த்தினார். அவரைத் தொடர்ந்து திரு எஸ் வன்னியசிங்கம் பேசும்பொழுது அரசு ஊழியரின் இன்றைய நிலைபற்றியும் தமிழ் ஊழியர்கள் எவ்வளவு திறமைசாலிகளாக இருப்பினும் பதவி உயர்வின்போது அவர்கள் பின்தள்ளப்படுவதனால் அடையும் விரக்திபற்றியும் அதன் நிமித்தம் பதவியில் இருந்து இளைப்பாறவேண்டியிருக்கிறது. என தன் அனுபவத்தையும் சேர்த்து தற்கால எளியபாணியில் எடுத்துரைத்தார்.

அடுத்து யாழ் பிரதேச தபால்அத்தியட்சகர் திரு. எம். பாலசிங்கம் பேசுகையில் இக் கூட்டத்திற்கு வருகை தந்தோரைப் பார்த்துத் தாம் ஆச்சரியமடைவதாகவும் இவ்வூக்கம் மேன்மேலும் வளரவேண்டுமென்றும் ஒவ்வொரு ஊழியர்களும் தத்தம் கடமைகளை பொதுமக்களுக்கு சிறந்த நற்சேவையாற்றி நன்மதிப்பையும் இலாகாவுக்கு நற்பெயரையும் பெற்றுத்தரவேண்டுமென்றும் இதனைத் தொழிற்சங்கங்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் கூறினார்,

யாழ் அஞ்சலதிபர் திரு. எம். அமிர்தராஜன் தமதுரையின்போது தாம் அங்கம் வகித்த சங்கத்துடன் ஒப்பிடும்போது இங்கு வருகை தந்தோரின் உற்சாகத்தையும் எண்ணிக்கையையும் பார்க்கும்போதும் இத்தகைய புதிய மாற்றம் தவிர்க்கமுடியாததுதான் என்று கூறினார்.

டாக்டர் பாலசிங்கம் தமதுரையில் பெருந்திரளாகவும் அதிலும் இளைமைத் துடிப்புடனும் இங்கு குழுமியிருக்கும் அங்கத்தவர்களைக் காணும்போது மென்மேலும் இச்சங்கம் வளர்ச்சியடைவதற்கான சாத்தியக்கூறுகள் தெளிவாய்த் தென்படுவதாகத் தெரிவித்தார். அத்துடன் தமிழ்பேசும் தொழிலாளர்கள் தமது கடமைகளைக் கவனிப்பதுடன் தம் வாழ்க்கையின் பொருளாதாரப் பழுவைக் குறைக்க மது அருந்துதல், படம் பார்த்தல் முதலிய தீய பழக்கங்களை விட்டு முன்னேற்றமகாண வழிவகுக்க வேண்டுமென்றும் இதனால் தொழிலாளியின் பொருள்

(5-ம் பக்கம் பார்க்க)

## கேள்வி விளம்பரம்

சுன்னாகம் பட்டணத்தில் சேரி ஒழிப்புத் திட்ட வீடுகள் (6) அமைப்பதற்கு இரு பிரதிகளைக் கொண்ட முத்திரையிடப்பட்ட கேள்விகள் 12-6-78ம் திகதி காலை 10-00 மணிவரை, சுன்னாகம் பட்டணம் விசேட ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ரூபா 45,000/-மும் அதற்கு மேற்படவும், அரசாங்கத்திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், உள்ளூராட்சி மன்றங்களில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கேள்விப்படிவங்கள் வழங்கப்படும்.

கேள்விக்காரர்கள் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமாக ரூ 300/-ம், கேள்விப்படிவ விலையாக ரூபா 50/-ம் சுன்னாகம் பட்டணசபை அலுவலகத்தில் செலுத்தி, பற்றுச்சீட்டையும், பதிவுச்சான்றிதழையும் 9-6-78ம் திகதி பி. ப 2-00 மணிக்கு முன்னதாக சமர்ப்பித்து கேள்விப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில், இவ்வலுவலகத்தில் வேலைகள் அத்தியட்சகரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விசேட ஆணையாளர்
சுன்னாகம் பட்டணம்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
சுன்னாகம் பட்டணம்,
சுன்னாகம்.
19 5-78.

9377

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வழ இல. ஈடு/12531

யாழ்ப்பாணம் அரியாலை 10/3, நடுத்தெரு ஒழுங்கை,
1. சந்ததயா வல்லிபுரமும்
2. மனைவி நாகம்மாவும்

வழக்காளிகள்

எதிராக

யாழ்ப்பாணம், அரியாலை, 19, கண்டி வீதி
1. கணபதி சின்னத்தம்பி செல்லத்துரையும்
2. மனைவி செல்லம்மாவும்

எதிராளிகள்

ஈடு/12531-ம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனங்கள் 1978-ம் வருஷம் யூன் மாதம் 16-ந் திகதி (16-6-78) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அவ்வாதனத்தல் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 9600/-. மேலும் இதில் 8,000/- ரூபாவுக்கு 26-5-71 தொடக்கம் 2-3-72 வரை வருடம் 10% வீத வட்டியும் அதன்பின் சேர்ந்த முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை வருடம் 5% வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 535-55 சதம். பவுண்டேச் விற்பனவுச் சலார்களும் இதில் தீர்வையால் ரூபா 6900/- வழக்குச்செலவால் ரூபா 100/- கழித்து மீதி.

### ஆதனங்கள் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்ட முப்பகுதியும் கண்டிக்குளிகோயிற்பற்று கிளியாதெரு இறை 'அத்திக்காடு வளவு'' நில. பர. 4 பயிர்வரும் இதன் எல்லைக்காரர்கள் கிழக்கு செல்லையா மனைவி அன்னப்பிள்ளை, வடக்கு கண்டி வீதி, மேற்கு செல்லையா மனைவி பொன்னம்மா, தெற்கு நாகலிங்கம் கைம்பெண் முத்தாச்சியின் உரிமைக்காரர்கள்.
பதிவு D 250/213

2. ஷெ மாவட்டம் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்றும், கோப்பாய் தெற்கிறையும் ''தண்ணன் பிரிவு சாலியகொட்டி வயல் சாலியாவோங்கை மறுபெயர் சின்னத்தோட்டம்'' நில. பர. 51 குளி $1\frac{1}{2}$ இதன் எல்லைக்காரர்கள் கிழக்கு கணபதிப்பிள்ளையின் உரிமைக்காரர்கள், வடக்கு பொன்னுத்துரையின் பிள்ளைகள், மேற்கு ரோட், தெற்கு மகேசன் மனைவி லெட்சுமியினதும் மற்றவர்களினதும் யாழ்ப்பாணம் பதிவு K 200/64.

வி. செ. குட்டிப்பிள்ளை,
விற்பனை ஆணையாளரும் விலைமதிப்பாளருமம.

''இராசகிரி'',
613, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்,
28-4-78.

9371

## பச்சிலைப்பள்ளி
# பல. நோ. கூ. சங்கம்,
## பளை.

கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் பதிவுத்தபால் மூலம் ''தலைவர், பச்சிலைப்பள்ளி பல. நோ. கூ. சங்கம், பளை என்ற முகவரிக்கு 7-6-78-ந் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடவேண்டும்.

### பொதுமுகாமையாளர் தரம் 111

தகைமைகள்:
1. கூட்டுறவுப் பயிற்சி பெற்றுள்ள பட்டதாரி, அல்லது
2. 3 வருட கால அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் உயர் தராதரப்பத்திரம் அல்லது
3. 5 வருட கால அனுபவம் பொருந்திய முன்னைநாட் கூட்டுறவும் பரிசோதகர் அல்லது
4. ரூபா 20,00,000இனை வருடாந்த மொத்த விற்பனவாகக் கொண்ட வியாபாரத் தாபனமொன்றில் மேல் முகாமைப் பதவியொன்றில் 3 வருட கால அனுபவமுடைய ஒருவர்.

வயது: 30 — 45க்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். குறைந்தளவு 2 வருடங்களாவது அந்த மாவட்ட எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

தலைவர்,
பச்சிலைப்பள்ளி பல. நோ. கூ. சங்கம்,
பளை.

9372

ஈழநாடு
The Eelanaadu

## குற்றச் செயல்களும் சுவரொட்டிகளும்

முன் எப்போதுமில்லாதவாறு சமீப காலத்தில் நாட்டில் வன்செயல்கள் அதிகரித்து வந்துள்ளன.

கொலை, கொள்ளை, வழிப்பறி, கற்பழிப்பு என்பன போன்ற வன்செயல்கள் குறிப்பிட்ட பகுதியில் மட்டுமன்றி, நாடு முழுவதிலும் பரவலாக நடைபெற்று வருகின்றன.

இச் சம்பவங்கள் அமைதியை விரும்பும் மக்களுக்கு அச்சத்தையும் கவலையையும் கொடுத்துள்ளன.

குற்றச் செயல்களையும், பயங்கரவாதச் செயல்களையும் தடுப்பதற்குச் சென்றவாரம் தேசிய அரசுப் பேரவையில் இரண்டு விசேட சட்டங்கள் அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டன.

நாட்டில் குற்றச் செயல்களைத் தடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை; பயங்கரவாதச் செயல்களைத் தடுத்து ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டியதும் ஜனநாயக அரசாங்கத்தின் கடமையும் பொறுப்புமாகும்.

குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களையும், பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுபவர்களையும் கண்டுபிடித்து தண்டனை வழங்க வேண்டியது நாட்டில் அமைதியையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பதற்கு அவசியமாகும்.

இதேசமயம் இப்படியான செயல்கள் ஏன் நாட்டில் தலைதூக்குகின்றன என்பதற்கான அடிப்படைக் காரணங்களை ஆராய்ந்து அவற்றுக்குப் பரிகாரம் காண வேண்டியதும் அவசியமாகும்.

இது ஒரு புறமிருக்க, குற்றச் செயல்களைப் புரிந்துவிட்டுத் தலைமறைவாகிவிடுபவர்களைக் கண்டுபிடிப்பதில் பொலிசாருக்குப் பல சிரமங்களேற்படுவது உண்மையே.

குற்றச் செயல்களிலோ, பயங்கரவாதச் செயல்களிலோ ஈடுபட்டதாகக் கருதப்படுபவர்களைக் கண்டுபிடித்து விசாரணை செய்து அவர்கள் இவற்றில் உண்மையாகச் சம்பந்தப்பட்டவர்கள்தான் என்று உறுதியானபின் அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தித் தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பும் பொலிசாருக்குண்டு.

பெரும் கொலை, கொள்ளைகளில் ஈடுபட்டுத் தண்டனை அளிக்கப்பட்டபின் சிறையிலிருந்து தப்பியோடிய குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்காக அத்தகையவர்களின் புகைப்படங்களுடன் கூடிய விளம்பரங்கள் பொலிஸ் நிலையங்களிலும் பொது இடங்களிலும் ஒட்டப்படுவது வழக்கம். இதற்காகச் சன்மானம் வழங்கப்படுமென்றும் அறிவிக்கப்படுவதுண்டு.

வடபகுதியில் சமீபத்தில் நடந்த வன்செயல்கள் தொடர்பாக விசாரணை நடத்திய பொலிசார் நான்கு பேரைச் சந்தேகத்தின் மீது தேடினர். அவர்களைக் கண்டுபிடிக்க முடியாததால் அவர்களின் புகைப்படங்களுடன் கூடிய சுவரொட்டிகளை வெளியிட்டனர். ஒரு லட்சம் ரூபாய் சன்மானமும் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. ஒரு சந்தேக நபர் அகப்பட்டுக் கொண்டார்.

ஆனால் 'தேடப்படுபவர்கள்' என்று இரண்டாவது சுவரொட்டி விளம்பரமொன்று முப்பத்தெட்டுப் பேரின் புகைப்படங்களுடன் வெளியிடப்பட்டது.

இவர்களில் பலரும் தங்கள் வீடுகளிலிருப்பவர்கள் என்று பேரவையிலேயே சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வி. என். நவரத்தினம் தெரிவித்தார். தேடப்படுவதாக அறிவிக்கப்பட்ட இளைஞர் பலரையும் அழைத்துப் பொலிசில் சரணடையவும் செய்திருக்கிறார்கள்.

வீடுகளில் தேடாமலேயே 'தேடப்படுபவர்கள்' என்று எதற்காகப் புகைப்படங்களுடன் கூடிய சுவரொட்டி விளம்பரங்களை நாடு முழுவதிலும் பொது இடங்களில் பகிரங்கப்படுத்த வேண்டும்? இதற்கு யார் பொறுப்பு? இது பற்றி அரசாங்கம் ஆராய வேண்டியது அவசியம்.

# "வன்செயல் எதிர்ப்புச்சட்டங்கள் மூலம் அரசியல் எதிரிகளை பழிவாங்க முயற்சிக்காதீர்கள்!" -சிறிமா

### "பொலிஸார் மீது உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் இனக்கலவரம் ஏற்பட்டிருக்காது"

(நேற்றைய தொடர்ச்சி)

இ. தொ. கா. தலைவரும், நுவரெலியா - மஸ்கெலியா தொகுதி 3-வது உறுப்பினருமான திரு. எஸ். தொண்டமான், "அரசியலமைப்பில் மாற்றங்களைக் கொண்டுவரவுள்ள வேளையில் இம்மசோதாவை ஏன் அவசரமாக நிறைவேற்ற முயற்சிக்கப்படுகிறது?" என்றார்.

#### பொலிசாருக்கு மேலும் அதிகாரம்

தொழிலாளரின் உரிமைகளைப் பாதிப்பதானஇச்சட்டம் பொலிசாருக்கு மேலும் அதிகாரங்களை வழங்குவதாகக் கூறிய அவர், தோட்டத்தொழிலாளர் பொலிசாரின் தாக்குதலுக்குள்ளாவது மிகச்சாதாரணமாகிவிட்டதென்று கூறியதுடன், அண்மையில் நடைபெற்ற பல சம்பவங்களையும் பிரஸ்தாபித்தார்.

கொத்மலை உறுப்பினர் திரு. ஆனந்த தசநாயக்கா (சு. க) வழக்கம் போலவே அரசாங்க பின்வரிசை உறுப்பினர்களின் கூச்சல்களுக்கும் முன்வரிசை உறுப்பினர்களின் குறுக்கீடுகளுக்குமிடையே கணிசமான அளவுநேரம் உரையாற்றினார்.

#### அவசியமற்றசட்டம்

நெருக்கடியான வேளைகளில் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அரசுக்கு அவசியமேயெனினும் இப்படியொரு சட்டத்துக்கு அவசியம் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை என்றார் திரு. தசநாயக்கா.

"எந்தவொரு சட்டமூலமும் மக்களின் இறைமையைப் பாதிக்கக் கூடாது. இதை அரசாங்க உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டும். எதைக்கொண்டு வந்தாலும் கையை உயர்த்துவதாகவிருந்தால் இப்பேரவையே வேண்டியதில்லை" என்று அவர் கூறினார்.

தான் ஒரு வழக்கறிஞரல்லவெனினும், நீதிபதிகளின்மதிப்புக்கு களங்கம் ஏற்படுத்தும் நடவடிக்கை இதுஎன்றும் திரு. தசநாயக்கா குறிப்பிட்டார்.

கட்டணியின் மற்றொரு பிரபல வழக்கறிஞரான சாவகச்சேரி உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினமும் சட்டமூலத்தின் பலபிரிவுகளின் விளைவுகளையும் விளக்கினார்.

"நாம் இம்மசோதா மீது தெரிவிக்கும் கருத்துக்களை அரசியல் கொள்கைகளின் அடிப்படையில் அல்ல, நாட்டு மக்களனைவரினதும் அடிப்படை உரிமைகளின் அடிப்படையிலேயே தெரிவிக்கிறோம். மக்களின் அடிப்படைஉரிமைகளைப் பாதுகாக்கும்பொறுப்பு 18ஆசனங்களைப் பெற்ற எம்மையும், 8 ஆசனங்களைப்பெற்ற சுதந்திரக்கட்சியினரையும் விட 140 ஆசனங்களைப் பெற்ற உங்களுக்கேஅதிகமாகஇருக்கிறது" என்று வலியுறுத்தினார் திரு. நவரத்தினம்.

"சுமார் இரு வாரங்களில் குற்றச்சட்டக் கோவையே மாற்றியமைக்கப்படவுள்ள போது, இச்சட்டத்தை ஏன் அவசரமாகக் கொண்டுவர வேண்டும்?" என்று கேட்ட அவர், பொலிசார்எவ்வாறெல்லாம் வழக்குகளைச் சோடிப்பதில் வல்லவர்கள் என்பதையும் விளக்கினார்.

#### கால எல்லை வேண்டும்

இச்சட்டத்தை வாபஸ்பெற நீங்கள் தயாரில்லை என்றால், இதன் வலுவுக்கு ஒரு கால எல்லையையாவது அளியுங்கள் என்றும் அவர் கேட்டார்.

"அப்படி ஒருகாலஎல்லையை இச்சட்ட மூலத்துக்களித்தால் இதனை நீங்கள் ஆதரித்து வாக்களிப்பீர்களா?" - எனக் கேட்டார் கைத்தொழில்விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்யூ.

## — மாலி —

- "இல்லை; இங்குஅடிப்படை மனித உரிமைகள் பறிக்கப்படுகின்றன" என்றார் நவம்.

எதிர்க்கட்சிகளின் தரப்பில் சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவியும் அத்தனகலை உறுப்பினருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா விவாதத்தை முடித்துவைத்துப் பேசினார்.

நீண்ட நாட்களின்பின், திரு. ஈ. எல். சேனநாயக்காவின் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்து அறிக்கையொன்றைச் சபையில் சமர்ப்பித்த பின்னர் அன்றுதான் அவர்உரைநிகழ்த்தினார். வரவு - செலவுத் திட்ட விவாதத்திலும் அவர் உரைநிகழ்த்தவில்லை.

திருமதி சிறிமாவோ பேச ஆரம்பித்த சமயத்திலும் சபை கலைகட்டி ஆரம்பித்தது. அரசாங்கக்கட்சியினரும், சுதந்திரக்கட்சியினரும் சுவாரஸ்யமாகவும் சிலவேளைகளில் கடுமையாகவும் மாறிமாறிக் குறுக்கிட்டுக் கொண்டிருந்தனர்.

திருமதி சிறிமாவோவும் அன்று குறுக்கீடுகளுக்கு சுவாரஸ்யமாகவும், காரசாரமாகவும் பதிலளித்த வண்ணம் உரைநிகழ்த்திக் கொண்டிருந்தார்.

#### நிரந்தர அவசரகாலச்சட்டம்

"மறைமுகமான ஓர் அவசரகாலச்சட்டம் இது" என்று குறிப்பிட்ட அவர்; அவசரகாலச்சட்டத்தை முன்னர் எதிர்த்தவர்கள் இன்று இதனை நிரந்தர சட்டமாக்குகிறார்கள் என்றார்.

அவசரகாலச் சட்டத்தைப் பொறுத்தவரை ஒருமாதத்துக்கொரு தடவை சபையில் அது புதுப்பிக்கப்பட வேண்டும் என்று அவர் கூறவும் பிரதமர் திரு. பிரேமதாசா குறுக்கிட்டு-

"அவசரகாலச்சட்டம்பற்றி விவாதிக்க எமக்கு ஒருபோதும் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை" என்றார்.

"எமக்கு 1971ல்ஏற்பட்டது போன்றுசிலநெருக்கடிநிலைமைகளைச் சமாளிக்க அரசுக்கு அதிகாரம் வேண்டுமென்பது உண்மையே. அதற்காகவே நாம் குற்றவியல் ஆணைக்குழுசட்டத்தைக் கொண்டுவந்தோம்; ஆயிரக்கணக்கானவர்களை நாம் விசாரிக்க வேண்டியிருந்தது. அப்போது திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா அதனை எதிர்த்தார்"! என்று அவர் கூறவும் உறுப்பினர் ஒருவர்-

"வதந்திகளைச் சாட்சியமாக்கினீர்கள்" என்று சொல்ல, திருமதி சிறிமாவோ-

"அதையே ஜனாதிபதி ஆணைக்குழுவில் நீங்களும் செய்கிறீர்கள்" என்றார்.

"பிரதமந்திரியாகச் திரு. எச். என். ஜி. பெர்னாண்டோ சட்டப்பட 5 உயர்நீதிமன்ற நீதியரசர்களால் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களை நீங்கள் விடுதலை செய்தீர்கள். அரசை வீழ்த்த முயற்சிசெய்தவர்களை மட்டுமல்ல; இந்நாட்டின் அந்நியச் செலாவணிய கோடிக்கணக்கில் கொள்ளையடித்தவர்களையும் விடுதலை செய்தீர்கள். அவர்களை விடுதலை செய்யவே தான் நீங்கள்விரும்பினீர்கள்" என்றும் அவர் கூறியபோது, திரு. காமினி திசநாயக்கா-

"திரு. எட்மண்ட் கூரே பற்றி என்ன கூறுகிறீர்கள்?" என்று கேட்கவும்-

"அவர் அதில்ஈடுபடவில்லை; தேவையற்றபேச்சு பேசவேண்டாம்" என்றார் திருமதி சிறிமாவோ சற்று கோபத்தோடு.

"இளைஞர்களை விடுதலைசெய்ததற்கு நாம் எதிர்ப்பல்ல; ஆனால், அரசுக்கெதிரான கிளர்ச்சி பாரதூரமான ஒரு குற்றமல்ல என்ற உணர்வை நீங்கள் நாட்டில் ஏற்படுத்தியிருக்கிறீர்கள். அதன் பயனையே இன்று அநுபவிக்கிறீர்கள்" என்று சொன்னார்.

"தேர்தல் நடந்துமுடிந்ததும் ஏற்பட்ட சம்பவங்கள் குறித்து பொலிசார் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் ஆகஸ்ட் இனக்கலவரம் ஏற்பட்டிருக்காது" என்றும் திருமதி சிறிமாவோ கூறினார்.

இச் சட்டமூலத்தின் பல் வேறுபிரிவுகளுடனும் தொடர்பான சட்டக் கருத்துக்களைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவரும் நல்லூர் உறுப்பினரும் மிகச் சிறப்பாக விபரித்தார்கள். நாம் சட்ட அறிஞர்களல்லாதபடியால் அவைபற்றி பேச நான் முயற்சிக்கவில்லை ஆனால்; இச் சட்டமூலத்தை பொலிசார் எவ்வாறு பயன்படுத்தப் போகிறார்கள் என்பதை யாத்திரம் என்னால் கூறமுடியும் என்பவர் அதற்கு காரணமாக அண்மையில் திருவாளர்கள் டபிள்யூ. குலரத்தின, நாத் அமரக்கோன், ஜீரோ ஆகியோர் கைதுசெய்யப்பட்ட சம்பவத்தைக் குறிப்பிட்டார்.

#### பொலிஸ் நியமனங்கள்

அப்போது தபால்தந்தி அமைச்சர் திரு. ஷெல்டன் ஜயசிங்க குறுக்கிட்டு—

"பொலிசாரில் 90 வீதமானோரை நீங்களே நியமித்தீர்கள். அத்துடன் இப்படியான நடவடிக்கைகளை நீங்கள் ஆயிரக்கணக்கில் மேற்கொண்டீர்கள்" என்று சொன்னார் அதற்கு திருமதி சிறிமாவோ—

"இரு தவறுகள் ஒரு சரியாக மாட்டாது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்" என்றார்.

அவர் பேசிக்கொண்டிருந்தபோது ஒரு கட்டத்தில் கூச்சல்கள் எழவும் அப்போது சபைக்குத் தலைமைவகித்துக் கொண்டிருந்த சபாநாயகர் திரு. ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் அரசாங்க உறுப்பினர்களைப் பார்த்து —

அவரைப் பேசவிடுங்கள்; அவர் இன்று மிக உற்சாகமாக இருக்கிறார் என்று கூறவும் திருமதி சிறிமாவோ உட்பட அனைவருமே சிரித்தனர்!

"அவர்கள் என்னை உற்சாகப்படுத்துகிறார்கள்" என்றார் சிறிமா.

ஒரு கட்டத்தில் திரு. ஷெல்டன் ஜெயசிங்க "1971ல் 25 ஆயிரம் பேர் கொலைசெய்யப்பட்டனர்" என்று கூறவும், திருமதி சிறிமாவோ—

"யார் அதைக் கணக்கிட்டவர்? நீங்களா கணக்கிட்டீர்கள்?" என்று கேட்டார்.

திரு. ஜயசிங்க! உங்களிடமிருந்து அந்த விபரம் எமக்கு வேண்டும். நாலவரை ஆண்டுகள் நீங்கள் ஒருவரை சிறைவைத்திருந்தீர்கள் என்று சொல்லவும், திருமதி சிறிமாவோ —

#### 'கட்டில்' பேச்சுக்கள்

"நீங்கள் அப்போது எங்கிருந்தீர்கள்? யாருடைய கட்டிலின் கீழ் ஒளிந்திருந்தீர்கள்?" என்று கேட்கவும் சபையில் பெருஞ் சிரிப்பும் கூச்சலும் எழுந்தன.

திரு. ஷெல்டன்! "நான் 1971ல் எங்கே இருந்தேன் என்ற உண்மையைச் சொல்கிறேன்"

திருமதி சிறிமாவோ! நான் நினைக்கிறேன் அவரது சொந்தக் கட்டிலின் கீழ் அல்லது வேறு யாருடையதேனும் கட்டிலின் கீழ் இருந்திருப்பார்.

"உங்கள் கட்டிலின் கீழ்" என்றும் "கட்டிலின் மேல்" என்றும் சபையிலிருந்து குரல்கள் எழவும், திருமதி சிறிமாவோ; எனது வீட்டில் நான் அவரை வைத்திருக்கவில்லை" என்று சொல்ல சபையில் மீண்டும் சிரிப்பொலி எழுந்தது. அச்சமயம் திரு. ஜயசிங்க, தான் தனிப்பட்ட விளக்கமொன்றை அளிக்கப் போவதாகக் கூறிக்கொண்டிருக்க; திருமதி சிறிமாவோ அவருக்கு இடம்கொடாது அவரை "என் வீட்டில் வைத்திருக்க எனக்குத் தேவை இல்லை" என்றார். அப்போதும் சிரிப்பு எழுந்தது.

#### பழிவாங்க முயற்சிக்காதீர்

திருமதி சிறிமாவோ தொடர்ந்து பேசுகையில்—

"அவசரகாலச்சட்டம்

[4-ம் பக்கம் பார்க்க]

## மணிவாக்கு

கடவுளிலேயே நாம் வாழ்கிறோம். அவரே நம் உயிர். அவருடைய குழந்தைகள் நாம்.

— இயேசுநாதர்

# ஆயுதங்களுக்குவருடாந்தம் 40 ஆயிரம் கோடி டாலர்

## 40 கோடியாவது ஆயுத பரிகரணத்துக்கு செலவிடுங்கள் என்கிறார் வால்ட்ஹெய்ம்

நியூயோர்க், மே 24

ஆயுத உற்பத்திக்காக ஆண்டுதோறும் செலவாகும் 40 ஆயிரம் கோடி டாலரில் 40 கோடி டாலரையாவது ஆயுத பரிகரணத்துக்குச் செலவிடவேண்டும் என்று ஐ. நா. பொதுச்செயலாளர் டாக்டர் குர்த் வால்ட் ஹெய்ம் ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

ஆயுதக் கட்டுப்பாடு குறித்து ஆராய்வதற்கான ஐ. நாவின் விசேட கூட்டம் நேற்று ஆரம்பமானது. இக்கூட்டம் 5 வாரங்கள் நடைபெறும்.

ஆயுதக் கட்டுப்பாடு, படைக்குறைப்பு ஆகியன பற்றி ஆராய விசேட ஆலோசனைக்குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும் என்று டாக்டர் வால்ட் ஹெய்ம் ஆலோசனை கூறினார். (இ)

மாநில சுயாட்சி கோரிக்கை:

# பம்பாயில் கருணாநிதி ஆதரவு தேடுகிறார்

பம்பாய், மே 24

நெருக்கடிகால அத்துமீறல்களை விசாரித்து வரும் ஷா கமிஷன் சர்க்காரியா கமிஷன் நியமனம் பற்றியும் விசாரணை செய்யவேண்டும்.

இவ்வாறு தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவரும், தி. மு. க. தலைவருமான திரு. மு. கருணாநிதி பம்பாய் விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

மாநில சுயாட்சிக் கோரிக்கைக்கு நாடு தழுவிய ஆதரவைப் பெறுவதற்காகவே நான் இன்று பம்பாய்க்கு வருகை தந்துள்ளேன். எமது சொந்த நிலத்தை விற்பதற்குக்கூட அனுமதி கோரி இப்போது டில்லிக்கு செல்ல வேண்டியுள்ளது. இன்றைய நிலையில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்குவதற்கு மாநில சுயாட்சி வழங்கப்படவேண்டும். இக்கோரிக்கை இப்போது மேலும் வலுவடைந்து வருகின்றது. இக்கோரிக்கையை இந்தியக் குடியரசுத் தலைவர் கூட வலியுறுத்தியுள்ளார் என்றும் திரு. கருணாநிதி கூறினார்.

திரு. கருணாநிதி, சர்க்காரியா கமிஷன்பற்றி கேட்டமற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில், இந்த கமிஷனை விட மக்களே தகுதியான நீதிபதிகள் என்று பதிலளித்தார்.

### நுழைவுக் கட்டண நிதி ரூபா 30,000

மாலை திரு. கருணாநிதி பேசிய பொதுக்கூட்டத்தில் நுழைவுக்கட்டணமாக ரூபா 30,000 வசூலானது. இன்றைய நிலையில் மக்கள் வாழ்வை வளமாக்க மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும். எனவே நீங்கள் எல்லோரும் சுயாட்சிக்கு ஆதரவு தாரீர் என அன்புரிமையோடு கோருகிறேன் என்றும் அவர் கூறினார்.

### சிவசேனைத் தலைவரைச் சந்தித்தார்

தலைவர் திரு. மு. கருணாநிதி பம்பாயில் சிவசேனைத் தலைவர் திரு பால்தக்கரேயைச் சந்தித்து நீண்ட நேரம் உரையாடினார். மாநில சுயாட்சி பற்றியே நீண்ட நேரம் விவாதித்ததாக கருத்து வெளியிட்டார். (கெ-இ)

……

### தேச இலங்கை மன்னன் பயணம்

(வவுனியா)

சென்ற மாதம் இலங்கை வந்திருந்த லண்டன் ஈழ விடுதலை இயக்கப் பிரமுகரும் "ஈழ விடுதலை"ப் பத்திரிகை ஆசிரியருமான திரு. தேச இலங்கை மன்னன் சென்ற வெள்ளிக்கிழமை லண்டன் பயணமானார். இவர் இலங்கையில் தங்கியிருந்தகாலத்தில் தமிழ்த் தலைவர்கள் அனைவரையும் சந்தித்து கலந்துரையாடியதுடன் இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகட்கும் சென்று பார்வையிட்டார். (உ)

……

### மக்கள் அவதி

(உடுப்பிட்டி)

நெல்லியடியில் பொது மலசலகூடமில்லாதிருப்பதால் பஸ் பிரயாணிகளும், பொது மக்களும் பெரும் அவதியும், கஷ்டமும் அனுபவித்து வருகின்றனர்.

நெல்லியடி மத்தியசந்தையின் உள்ளே பொது மலசலகூடம் ஒன்றிருந்த போதிலும் வெளியாருக்கு இப் பொது மலசலகூடம் இருப்பது தெரியாமலிருப்பதுடன் இச்சந்தை வாயிலும் மாலை 6 மணியுடன் பூட்டப்பட்டு விடுகின்றது.

இதனால் பல நிலையத்தினருகிலுள்ள ஒழுங்கைகளும், மறைவிடங்களும் மலசலகூடங்களாக மாறி துர்நாற்றம் வீசுகின்றன.

இதுசம்பந்தமாக நெல்லியடிப் பட்டின சபைக்கும், இ. போ. ச.வுக்கும் புகார் செய்யப்பட்டுள்ளது. (உ)

……

### தற்காலிக நிறுத்தம்

(உடுப்பிட்டி)

அடுத்த மாதம் முதல் நெடுந்தீவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள கரவெட்டிப் பகுதி பங்குக்குருவர் அருட்திரு. பீட்டர் துரைரத்தினம் அடிகளாரின் இடமாற்றம் கரவெட்டிப் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும், இத்தேவாலய உற்சவம் நிறைவு பெற்றவுடன் அடிகளார் நெடுந்தீவுக்குச் சடமையாற்றச் செல்வார் (உ)

ஷா கமிஷனின்

# இந்திராகாந்தி மீதான குற்றச்சாட்டுக்கள்

புதுடில்லி, மே 24

இந்தியாவில் நெருக்கடி காலத்தில் நடைபெற்ற அத்துமீறிய செயல்கள் குறித்து விசாரணை நடத்தி வரும் ஷா கமிஷனது முதலாவது அறிக்கையில் திருமதி இந்திராகாந்திமீது பத்திரிகைகளுக்கு மின் இணைப்பு துண்டிப்பு அரசியல் தலைவர்களது இடைவிடாது களவு பார்க்கும் கருவியாக ஐ. பி. ஐயை நடத்தியமை, நாடாளுமன்ற நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு முன் தணிக்கை நிர்ப்பந்தத்தின் மூலம் "சமாச்சார்" நிறுவனம் உதயம், விளம்பரம் வழங்குவதில் அரசியல் கண்ணோட்டம் ஆகிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

கடந்த வாரம் லோகசபையில் வெளியிடப்பட்ட ஷா கமிஷனது முதல் அறிக்கையிலேயே திருமதி காந்திமீது இக்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

திருமதி இந்திராகாந்தி நாட்டில் முக்கிய பிரச்னைகள் இருந்த நேரங்களில் பத்திரிகைகள் கடிய காலத்தில் செய்திகளை வெளியிடாமல் இருக்க தனது சொந்த செல்வாக்கைப் பயன்படுத்தி பத்திரிகைகளுக்கு மின்சாரத்தை தடை செய்துள்ளார்.

தமக்கு விரோதமாக செயல்படும் அரசியல் தலைவர்களைக் கண்காணித்து அவர்களது செயல்களை அவதானிப்பதற்கு ஐ. பி. ஐயை தூண்டியுள்ளார்.

நாடாளுமன்றத்திலும், நீதிமன்றங்களிலும் நடைபெறும் எதேச்சாதிகாரமான நடவடிக்கைகளை நாட்டுமக்கள் அறியாதவாறு முன் தணிக்கை சட்டமூலங்களை நிறைவேற்றினார்.

செய்திகளை தமது விருப்பப்படி வெளியிடுவதற்கு "சமாச்சார்" செய்தி ஸ்தாபனத்தை நிறுவி நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற முயன்றார்.

தம்மைப் புகழ்ந்து செய்தி வெளியிடுபவர்களுக்கும் அரசு சார்பு பத்திரிகைகளுக்கும் அரசியல் கண்ணோட்டத்தின் அடிப்படையில் அரசு விளம்பரங்கள் வழங்கினார் என்பனவே திருமதி காந்தி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களாகும். [கெ-இ]

"குறளின் பெருமையை

# ஆயுள் உள்ளவரை மறக்கக் கூடாது"

— வி. பீ.

(நெல்லியடி)

"தமிழர்களின் பெருமைகளை எடுத்துப் பேசுவதற்கு நமக்கு உதவிய நூல் வரிசையில் திருக்குறளும் ஒன்றாகும். இத் திருக்குறளுக்கு தமிழ்மக்கள் தம்மாயுள் உள்ளவரை நினைவுகூர்ந்து விழா எடுத்து வரல் வேண்டும்."

இவ்வாறு செந்தமிழ் இயக்கப் பொதுச் செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரால் நடாத்தப்பட்டு வரும் 20வது ஆண்டு வள்ளுவர் நினைவு விழா முதல் நாள் நிகழ்ச்சியில் கலந்து சிறப்புரை ஆற்றுகையில் குறிப்பிட்டார். திரு. த. இராசலிங்கம் எம். பி. தலைமையில் நடந்த இவ்விழாவில் திரு. வி. பொன்னம்பலம் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது... "திருக்குறள் தமிழில் எழுந்ததால் சிறப்புப்பெற்றது. மற்றைய மொழிகளில் பல நூல்கள் எழுந்தன. இதன் சிறப்பை அவை பெறவில்லை. மொழி என்பது போக்குவரத்து சாதனமாகும். மொழியின் தன்மையிலேயே பிரயாணிகளின் நலனும் பயனும் பேணப்படும். அதே நேரத்தில் போன மண்ணினும் சென்றாலும் சிறப்புக் குன்றுது. இதனால்தான் காந்தி தமிழைப் படித்தார். நல்ல கருத்துக்களைக்கொண்டு மொழி இருத்தல் வேண்டும். காந்தி ஒரு சமயத்தில் கூறினார் "மொழியைப் படித்தால் தான் அறிவைப் பெறமுடியும்" என்று. ஆகவே காந்தி கூறியதிலிருந்தே தமிழ்மொழி அறிவுக்குரிய மொழியென்பதையும், தமிழில் எழுந்த வள்ளுவமும் அறிவுடையது என்பதுவும் தெரிகிறது" என்றார். (உ)

# மக்களைக்காப்பதே அரசனின் கடமை

## வள்ளுவம் இதையே கூறுகிறது' என்கிறார் நல்லூர் எம். பி.

(நெல்லியடி)

"தமிழ்ப்பேசும் மக்கள் எதிர்காலத்தில் வன்முறையால் ஒடுக்கப்படலாம். அவர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள இதுவரை எந்தவித வன்முறையையும் உபயோகித்தது கிடையாது" என்று கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட வள்ளுவர் விழாவில் கலந்து கொண்ட நல்லூர் தேசிய அரசுப் பேரவை உறுப்பினரான திரு. மு. சிவசிதம்பரம் விசேடமாக அமைக்கப்பட்ட பொன் சுந்தையா அரங்கில் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். தொடர்ந்தும் தலைமையுரையில் அவர் குறிப்பிட்டதாவது: இவ் விழாவிலே திரு. த. இராசலிங்கம் முதல் நாள் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கவும் நான் 2ம் நாள் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி நடத்துவது எல்லாம் தமிழ் மக்கள் ஒன்றுபட்டுவிட்டார்கள் என்பதை வெளிப்படையாக எடுத்துக் காட்டுகின்றது. வள்ளுவர் என்ன ஜாதி? என்ன மதம்? எங்கே பிறந்தார் என்றவிவாதம் இன்று நடைபெறுகிறது. ஆனால் உலக பொது நூலாக வள்ளுவம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆரியத்திற்கும் தமிழிற்கும் நடந்த போட்டியில் தமிழே வெற்றி கொண்டது என்பேன். பகவத்கீதை வேறு மொழியில் மொழி பெயர்க்கப்பட முன் வள்ளுவமே பிறமொழியில் வெளிவந்ததாகும்.

வள்ளுவர் தமிழ் மக்களின் அன்றைய நிலையினைத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். அரசியல் நெறியை, தர்ம நெறியை, குடும்ப வாழ்க்கை நெறியை படம்பிடித்து சிறப்புடன் காட்டியுள்ளார். அரசனின் கடமையை விளக்கிய வள்ளுவர் அதனை, மக்களைக்காப்பதே அரசனின் கடமைஎன்றார். அந்தக் காலத்து மன்னன் அங்ஙனமாக இருந்ததால்தான் அப்படி வள்ளுவர் கூறியிருக்கின்றார். இக்கருத்து ஞானிகள் கருத்தல்ல, வள்ளுவன் ஒரு கவிஞன். அவன் காலத்திற்குக் காலம் தன்மைக்குத் தன்மையாகவே பாடுவான். இங்ஙனமாக அக்காலத்து மக்கள் பாதுகாக்கப்பட்டார்கள். மொழி பாதுகாக்கப்பட்டது; அவர்களின் கலைக்கலாசாரம் பாதுகாக்கப்பட்டது. பண்பாடு பொருளாதாரம் பாதுகாக்கப்பட்டது. இதற்கெல்லாம் காரணம் அந்தக் காலத்து மன்னனிடம் அரசியல் அதிகாரம் இருந்ததே.

அதனால்தான் நாமும் நமது மொழியையும் இனத்தினையும்

[6-ம் பக்கம் பார்க்க]

### அரசியல் —

(3ம் பக்கத் தொடர்ச்சி)

களைப் பிரகடனப்படுத்தப் போவதில்லை என்றது இந்த அரசாங்கம். ஆனால் இன்று என்ன நடக்கிறது? பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் முப்படைகளையும் நீங்கள் இன்று சேவைக்கு அழைக்கவில்லையா?

புலி இயக்கமோ, கரடி இயக்கமோ, யானை இயக்கமோ எதுவாக இருந்தாலும் வரலாற்றுக்கெதிரான அரசின் நடவடிக்கைகளை நாம் எதிர்க்கவில்லை. எங்களின் ஒத்துழைப்பை நாம் நிச்சயம் அளிப்போம். ஆனால் இவற்றைச் சாட்டாக வைத்து அரசியல் எதிரிகளை பழிவாங்க முயற்சிக்காதீர்கள். நாம் இம் மசோதாவிற்கு ஆதரவு அளிக்க முடியாது" என்று கூறி, திருமதி சிறிமாவோ தனது பேச்சை முடித்துக்கொண்டார். அதன்பின்னர் அரசாங்க தரப்பிலான கடைசி உரையை பிரதமர் நிகழ்த்தினார்.

[முற்றும்]

# மனிதாபிமானம் இல்லை என்றால் கற்றதனால் என்ன பயன்?'

## — தமிழக அறிஞர் மீனாட்சிசுந்தரனார்

(யாழ்ப்பாணம்)

இலக்கியத்தில் இராமாயணம் எழுதப்பட்டதன் நோக்கம் உலக நாடுகள் அனைத்தும் தமக்குள்ள வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைந்த நேசநாடுகளாகவும் அவற்றின் தலைவர்கள் அனைவரும் நண்பர்களாகவும் இருக்கவேண்டும். சாதி சமய இனபேதங்களை மறந்து சகலரும் சமமென்ற நிலையில் ஒன்றிணைந்து வாழவேண்டும் என்பதற்காகவே'.

இவ்வாறு யாழ். வளாகத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தரும் முதுபெரும் தமிழ் ஞானியுமான திரு.தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் கூறினார்.

அவர் தொடர்ந்து தமதுரையில்,

''மனிதன் ஒரு சமுதாயப் பிராணி. அவன் பிறக்கின்ற போதே தாயும்- பிள்ளையும் என்று இணைந்தே பிறந்தான். அவனால் தனியாக வாழமுடியாது.

ஐந்தறிவு படைத்த மிருகங்கள் கூட பிறந்தவுடன் தமது இனத்தை விட்டுப்பிரிந்து வாழமுடிகிறது. ஆனால் ஆறறிவு படைத்த மனிதனுக்கு இந்த நிலையில்லை.

இன்றெல்லாம் 20 வயது வரை தாய் தந்தையர் வகையை நம்பி வாழவேண்டியவர்களாக இருக்கிறார்கள். சமுதாயத்தில் பல்வேறுபட்ட மனிதர்களோடு கூடி வாழ்கிறார்கள். நாம்பேசுகின்றமொழி தனிமனிதஇனத்திற்குமட்டும் உரித்தான சிறப்பம்சமாகும். நாம் ஏன் பேசுகின்றோம் எமது எண்ணங்களை உணர்வுகளை- மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்காகவே பேசுகின்றோம்.

மனிதன் தனியனாக இருந்தால் இந்த மொழியென்ற ஒன்றே தேவையில்லை. சில பிராணிகள் தமது உணர்வுகளை சப்தமூலம் வெளிக்காட்டுகின்றன என்றாலும் மனிதனைப் போல மிகத் தெளிவாகவும் நுணுக்கமாகவும் வெளிக்காட்ட முடிவதில்லை.

மனிதனைப்போல எல்லா உணர்வுகளையும் வெளிக்காட்டக் கூடிய நிலைமை பிராணிகளிடம் இல்லை. எனவேதான் மனிதனை சமுதாயப் பிராணி என்கிறோம். அதனால்தான் மனித உயர்வைப் பற்றிப்பேச வந்தவர்கள் சமுதாயத்தைப் பற்றி ஆராய்கின்றார்கள். பல அறிஞர்கள் சமுதாயம் எப்படி அமையவேண்டும் என்று கனவு கண்டார்கள்.

பெண்ணைக் கனவிலும் கருதாத ராமனைப் பார்க்கிறான் கம்பன். தாய் தந்தையைத் தெய்வமாகப் போற்றுகின்ற உயர்ந்த சமுதாயம் இருக்க வேண்டும். எனவே ராமனை படைத்து ராமராஜ்யத்தின் உயர்வை உயர்த்துகிறான். எந்தநாடும் தனித்து நின்று பேரமுடியாது.

உலகத்திலேயே பெரிய யுத்தம் நிகழ்ந்தபோது நாம் யுத்தத்திற்குப்போகாவிட்டாலும் நோய், பொருள், தட்டுப்பாடு என்பன எமது நாட்டிலுமிருந்தன. உலகம் முழுவதும் உயர்ந்த நிலையில் வாழ்ந்தாலன்றி ஒரு நல்ல சமுதாயம் உருவாக முடியாது.

உலகம் முழுவதும் ஒரு குடும்பம் என்ற உணர்வு வேண்டும் அரசர்கள் நாடாவதில்லை. அரசர்கள் சமுதாயமாவதில்லை. அரசனால் ஆக்கப்படுகின்ற சட்டங்கள் மக்களால் ஏற்கப்படாவிட்டால் அவை தூக்கி எறியப் படுகின்றன. எனவே மன்னர்களைவிட மக்கள் உயர்ந்தவர்கள் இதை காட்டத்தான் சிலப்பதிகாரம் எழுதப்பட்டது. கோவலன் வாழ்வைச் சித்தரித்து அதன் மூலம் தனிமனித வாழ்வின் உயர்வை - சிறப்பை எல்லாம் காட்டினார். சிலப்பதிகாரத்தில் மன்னர்களைப் பற்றி மிகக் குறைவாகவே எழுதினார்.

சாதி வேற்றுமைகளைக் களைந்து குகனைத் தன் சகோதரனாக ராமன் ஏற்றுக் கொண்டதன் மூலம் தாழ்ந்தவன் உயர்ந்தவன் என்ற வேறுபாட்டைக் களைந்தான் கம்பன்.

உலக சமுதாயம் ஒன்றாக அமைய வேண்டும். வளர்ந்து விட்ட நாடுகள் - வளர்ந்து வரும் நாடுகளுக்கு உதவிகொடுத்து தமது செல்வாக்கை நிலைநிறுத்தப் பார்க்கிறார்கள். இவர்கள் சிறு மீனைப் போட்டு பெரிய மீனைப் பிடிப்பது போல.

(6-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வளம் ஓங்க அவனது வாழ்வு தனக்கும் தேசத்திற்கும் சிறந்த பிரஜையாக அமையுமென்றும் வலியுறுத்தினார். அண்மையில் நடந்த கலவரத்தின் போது தமிழ்ஊழியர்கள் பாதிக்கப்பட்டார்களே என்றும் தமிழரது நிலைமை! இன்று இப்படியிருக்கிறதென்றும் இதற்கு கடந்தகாலத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் காரணமாக காட்டின என்றும் மொழிவழித் தொழிற்சங்கங்கள் ஏன் உருவாகின என்றும் விளக்கினார்.

அஞ்சல் எழுதுவினைஞர் சங்கப் பிரமுகர் ஆர் தங்கவேலாயுதசாமி தமதுரையில் தமிழ்த் தொழிலாளரது ஒற்றுமை பற்றியும்மொழிவழித்தொழிற்சங்கக் கூட்டிணைப்பின் பலம் பற்றியும் எடுத்துரைத்தார். இதனைத் தொடர்ந்து யாழ் கிளைத் தலைவர் திரு எஸ். சண்முகலிங்கம், கொழும்புக் கிளைத்தலைவர் எஸ். சண்முகலிங்கம், கொழும்புக்கிளைத் தலைவர் திரு எஸ் சிவம் ஆகியோர் யாழ் எதிரணியினரால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரமொன்றுக்கு நியாயபூர்வமான பதிலளித்துக் கொடுத்து சங்கக் குறிக்கோள் பற்றியும் எடுத்துரைத்தனர். இவர்களுடன் திரு எஸ் சுப்பிரமணியம், எஸ் சீ கருணைரட்ணம் ஆகியோரும் கருத்துரை வழங்கினர். இத்துடன் செயற்குழு நியமனங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

## புதிய அதிபர் நியமனம்



(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மகளிர் கல்லூரி பொருளியல் பட்டதாரி ஆசிரியை செல்வி ராதா சோமசுந்தரம் கிளிநொச்சி செண் திரேசா மகாவித்தியாலய அதிபராக இம்மாதம் 17ம் தேதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார் சங்கீதத்துறையில் ஆசிரிய தராதரப் பத்திரம் பெற்றுள்ள இவர், சாரணிய இயக்கத்தில் நிலநாட்டு அதிகாரியாகவும், சாரணியத் தலைவியாகவும், செஞ்சிலுவை சங்க வட்டார அதிகாரியாகவும் இருக்கின்றார். (ஈ)

## தங்கப் பதக்கம் பெற்றார்



கொழும்பு விவேகானந்த சபை கடந்த ஆண்டு நடத்திய சமய பாடப் பரீட்சையில் ஒன்பதாம் வகுப்பில், முதலாம் இடத்தைப் பெற்ற உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலய மாணவி செல்வி ந. இந்துமதிக்கு சபை சார்பில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் தங்கப்பதக்கம் சூட்டிப் பாராட்டினார்.

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற இப் பரீட்சையில் ஒன்பதாம் வகுப்புப் பரீட்சைக்குத் தோற்றிய 11549 மாணவர்களில் முதலாம் இடத்தைப் பெற்ற செல்வி ந. இந்துமதி பல்கலைக்கழகப் புலமைப் பரிசிலையும் பெற்றார். செல்வி இந்துமதி உரும்பராய் கேற்றைச் சேர்ந்த நல்லையா தங்கலட்சுமி தம்பதிகளின் புதல்வியாவர். (இ)

## மக்களை...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மதங்களையும் பண்பாடுகளையும் பேணிப் பாதுகாக்க நமக்கு அரசியல் அதிகாரம் தேவை என்று கூறுகின்றோம்'' (உ)

## சுன்னாகத்தில் மாநாடு கூட்டினர் 'சூரியர்'

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு சமீபத்தில் விஜயம் செய்த சுதந்திரக் கட்சித் தலைவர்களில் ஒருவரும் முன்னாள் தபால், தந்தித் தொடர்புகள் அமைச்சருமான திரு. செல்லையா குமாரசூரியர் சுன்னாகம் சுற்றுலா விடுதியில் உடுவில் தொகுதி சுதந்திரக் கட்சிப் பிரமுகர்கள், உறுப்பினர்கள் அடங்கிய மாநாடு ஒன்றினை நடத்தினார்.

இம்மகாநாட்டில் தொகுதி உறுப்பினர்களும், தொகுதியின் சுதந்திரக் கட்சிப் பிரமுகர்களான திருவாளர்கள் கு. விநோதன், சி. சிவஞானம் (சுசிதர்) எஸ். சண்முகநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பலதரப்பட்ட விடயங்கள் பற்றி மாநாட்டில் ஆராயப் பட்டனவாம். (உ)


நாகம்ஸ்
'சுன்னாகம்'
தினசரி
6-45, 10-00
ரஜனிகாந் - ஸ்ரீதேவி
நடித்த
மூன்று முடிச்சு

வெஸ்லி
(சாவிப்பாயி)
தினசரி 6-30, 9-45
ஜெய்சங்கர்-பத்மினி
நடித்த
பெண் தெய்வம்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — விஜயா
நடித்த
ராமன் எத்தனை ராமனடி

ராணி (யாழ். நகர்)
காட்சிநேரங்கள் குறிப்பிடமுடியாமைக்கு வருந்துகிறோம்
சிவாஜி - மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(சினிமாஸ்கோப் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

விடேர் (யாழ். நகர்) போன்: 7691
ஏ. வி. எம். ராஜன், பானுமதி
பூவும் பொட்டும்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
வெற்றிகரமான
தினசரி 4 காட்சிகள் 3வது வாரம்
முத்துராமன் — சந்திரகலா
நடித்த
காலங்களில் அவன் வசந்தம்
உலகச் செய்திகளும் காண்பிக்கப்படும்
(கலர்)
Also Showing World news in colour

சில தினங்கள் மட்டும்
மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - வாணிஸ்ரீ
நடித்த
ஊருக்கு உழைப்பவன்

வின்ஸர் — யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — மஞ்சுளா — நாகேஷ்
நடித்த
எங்க தங்க ராஜா

Regal (Jaffna)
Daily at 4-45, 7-00 and 9-30 p.m. only
FIVE CRAZY BOYS (Color)
From 26-5-78 LIBERATION
(Cinemascope color)

சாந்தி யாழ். நகர் — போன் 7612
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
எம்.ஜி.ஆர். ஜெயலலிதா, நம்பியார் நாகேஷ்
ராமன்தேடியசீதை
மே 27-28 திகதிகளில் காலை 8-30 மணிக்கு மட்டும் Finist the Falcon

Rio (Jaffna)
Phone: 7607
Daily 10-30, 2-30, 4-45, 7-00, & 9-30 p.m.
James Coburn & James Mason
in
Cross of Iron

# பட்டாசு வெடிச்சத்தம் கேட்டது சிறிது நேரத்தில் கடைகள் எரிந்தன

## சன்சோனிக் கமிஷன்முன் வத்துகாமம் கடைக்காரர் சாட்சியம்

[கண்டி]
பட்டாசு வெடிப்பதுபோல் சத்தம்கேட்டது. சிறிது நேரத்தில் கடைகள் எல்லாம் எரியத் தொடங்கின என்று நேற்று சன்சோனிக் கமிஷன்முன் சாட்சியமளித்த வத்துகாமத்தைச் சேர்ந்த கடை உரிமையாளர் ஏ. கே. கருப்பையா பிள்ளை என்பவர் கூறினார்.

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில்; கடைகள் இருந்த இடத்திலிருந்து சுமார் 200 யார் தூரத்திலேயே பொலிஸ்நிலையம் இருந்தது என்றும் அங்கிருந்து பார்த்தால் கடைகள் எரிவது தெரிந்திருக்கும் என்றும் அவர் சொன்னார்.

அகதிகள் முகாமில் இருந்தபோது ஒரு பெட்டிசம் தயாரிக்கப்பட்டு கையெழுத்துப் பெறப்பட்டதாகவும் தாமும் அதில் ஒப்பமிட்டதாகவும் அவர் கூறினார்.

சட்டத்தரணி உருத்திரமூர்த்தி சாட்சியை குறுக்குவிசாரணை செய்தார்.

சாட்சி கூறியதாவது: மத்துகாமத்தில் ஆகஸ்ட் 19ம் திகதி பகல் 11 மணியளவில் ஊரடங்குச்சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. ஆனால் சனநடமாட்டம் குறையவில்லை. எனது வீட்டிலிருந்து சுமார் 100 யார் தொலைவில் என் கடை இருந்தது. சம்பவ தினம் 6-30 மணியளவில் பலத்த சத்தம் கேட்டது. அதே சமயம் எனது வீட்டுக்கு கல்லெறியப்பட்டது. பக்கத்திலுள்ள பாடசாலையில் கூடியிருந்தவர்கள் கற்களை வீசினார்கள். சிறிதுநேரத்தில் சுமார் 300 பேர் கொண்ட இன்னொரு கூட்டம் அவர்களுடன் சேர்ந்துகொண்டது. இரவானதும் சுமார் இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் பேர் கூட்டமாகக் கூடியிருந்தார்கள். ஏழுமணியளவில் கடைகள் உடைக்கப்பட்ட சத்தம் கேட்டது. 19ம் திகதிதான் பொலிசார் காணப்பட்டார்கள். 20ம் திகதி பொலிசாரும் இராணுவத்தினரும் காவல்புரிந்தார்கள்.

### அமைச்சரின் பேச்சு

சன்சோனிக் கமிஷன் விசாரணையின்போது காணி விவசாய அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா தேசிய அரசுப் பேரவையில் ஆற்றிய உரை ஹன்சாட்டில் இருந்து வாசித்துக்காட்டப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக ஆஜரான சட்டத்தரணி திரு. சமரசாரவே இதனை வாசித்துக்காட்டினார்.

ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற சம்பவங்களுக்கு சுதந்திரக்கட்சியே பின்னணியாக இருந்ததாகவும், முன்னாள் பிரதி காணிவிவசாய அமைச்சரினதும் மற்றும் பலரினதும் பெயர்கள் திரு ஈ. எல். சேனநாயக்காவின் பேரவைப் பேச்சில் பிரஸ்தாபிக்கப்பட்டதாகவும் திரு சமரசார கமிஷன் முன் தெரிவித்தார். [உ]

## சட்ட—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யும் தடைசெய்யவும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யவும் சிலதினங்களுக்குமுன் தேசிய அரசுப்பேரவை நிறைவேற்றிய சட்டமூலங்களில் நேற்றிரவு தேசிய அரசுப்பேரவை சபாநாயகர் கையெழுத்திட்டார். இதன்படி நேற்றிரவு முதல் இச்சட்டங்கள் அமுலுக்கு வந்துள்ளன.

இச்சட்டமூலங்களின் 500 பிரதிகள் அச்சிடப்பட்டு நாடு முழுவதும் விநியோகிக்கப்படவிருப்பதாக நீதி அமைச்சு அதிகாரி ஒருவர் கூறினார்.

## காசி இன்று பொலிஸ் செல்வார்

கவிஞர் காசி ஆனந்தன், நேற்று வரை பொலிஸாரிடம் சென்று தம்மை ஒப்படைக்கவில்லை.

இன்று, மட்டக்களப்பில் அவரும், திரு நடேசானந்தனும் பொலிஸ் அதிபரைச் சந்திப்பாரென்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

## தமிழினத்தின் விடிவுக்காக போயா தினங்களில் மௌனபிரார்த்தனை செய்வர்

(மட்டுவில்)
தமிழினத்தின் விடிவுக்காக சாவகச்சேரித் தமிழர் விடுதலைக் கூட்டணி மாதர் பேரவைக் கிளையினர், பிரதி போயா தினங்களில் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை மௌனப் பிரார்த்தனை செய்வதெனத் தீர்மானித்துள்ளனர்.

மாதர் பேரவைத் தலைவி திருமதி மீனம்மா ஐயாத்துரையினதும், திருமதி இராஜபூபதி அருணாசலம் உட்படப் பலரின் சம்மதத்தின் பேரிலேயே இத்தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

பிரதி போயா தினமும் மௌனப் பிரார்த்தனையை மாதர் பேரவை செய்துவரும். சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் இதை ஆரம்பித்துவைப்பார். இந்த மௌனப் பிரார்த்தனையைச் சகல மாதர் பேரவைகளும் கையாண்டுவந்தால் தமிழ் இனத்திற்கு ஆத்மீக விமோசனமும், ஒளிமயமான எதிர்காலமும் உருவாகுமென்பது தமது நம்பிக்கை என்று திருமதி இராஜபூபதி அருணாசலம் தெரிவித்தார்.

## யாழ்ப்பாண—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ணத்திலும் வெவ்வேறாக இருந்துவந்தது. புதிய திட்டத்தின்படி நாடு முழுவதும் பாணையும், மாவையும் ஒரே விலையில் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. ஆனந்தன் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார். [உ]

## சுதந்திரக்..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தேர்தலின்போது சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு ஆதரவாகத் தாம் வேலைசெய்யவில்லையென்றும் என்றுமே கலவரத்தின்போது தாம் தாக்குதலுக்குள்ளாகவில்லையென்றும் கூறினார்.

இந்தக்கட்டத்தில் ஆணையாளர் திரு. சன்சோனி குறுக்கிட்டு உங்கள் கட்சியின் சார்பில் ஊரிலுள்ள அனைவரையும் கொண்டுவந்து குறுக்குவிசாரணை செய்துகொண்டிருந்தால் இந்தவிசாரணை எங்கே போய் முடியும்? என்றுகேட்டதுடன், இதுவரைக்கும் தனிப்பட்ட முறையில் எவரையும் குற்றஞ்சாட்டும்விதத்தில் கண்டியில் சாட்சியம் அளிக்கப்படவில்லையென்றும் அப்படியான ஒரு நிலை வந்தால் அதுபற்றி பிறகு விசாரிக்கலாம் என்று கூறி முற்றுப்புள்ளிவைத்தார். (ம)

## இந்த மாணவர்களுக்கு கல்லூரிகளில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாம்

[யாழ்ப்பாணம்]
வடபகுதி கல்லூரிகளில் ஜி. சி. ஈ. உயர்தர வகுப்பில் அனுமதி கோரி விண்ணப்பித்திருந்த சகல மாணவர்களுக்கும் பாடசாலைகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இதுசம்பந்தமாக ஜூன் முதலாம் திகதிக்குமுன் சகல விண்ணப்பதாரர்களுக்கும் அறிவிக்கப்படுமென்றும் வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

இது தொடர்பாக சந்திப்பு எதுவும் அனுமதிக்கப்படமாட்டாதென்றும் அவர் தெரிவித்தார். (அ)

## ஸயரில் 250 வெளிநாட்டினர் படுகொலை

கின்ஷாஸா, மே 24
ஸயரில் அரசுத் துருப்புக்களுடன் போரிட்டுவரும் விடுதலை முன்னணி பிரிவினைவாதிகள் 250 வெளிநாட்டினரைப் படுகொலை செய்துள்ளனர் என்று பிரெஞ்சு இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஸயரில் உள்ள ஐரோப்பியர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்த பிரெஞ்சுத் துருப்பினர் ஓரிடத்தில் மட்டும் 30 வெளிநாட்டினரின் சடலங்கள் குவிந்திருப்பதைக் கண்டுபிடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. [இ]

## 50 தொழில்நுட்ப நிறுவனங்கள்

(கொழும்பு)
நாடு முழுவதும் இந்த ஆண்டு 50 தொழில்நுட்ப நிறுவனங்களை அமைக்க கல்வி அமைச்சு முடிவுசெய்துள்ளது.

## கலாபதி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சட்டவிரோதமாக பொலிசார் கைதுசெய்தார்கள். சுப்ரீம்கோர்ட் பின்னர், ஆட்கொணர்வு மனுவை ஏற்று இவரை விடுதலைசெய்தது.

"இம்மாதம் 13ந் திகதி வல்வெட்டித்துறைப் பொலிசாரால் மீண்டும் கைதுசெய்யப்பட்ட இவர், இன்றுவரை நீதவான் முன்னிலையில் ஆஜர்செய்யப்படாமல், பொலிசாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருப்பதால் அவரது உயிருக்கு ஆபத்தேற்படும் அபாயம் இருக்கிறது. ஆதலால் அவரைச் சட்டபூர்வமான பாதுகாப்பில் வைக்கவேண்டுமென்று உயர் நீதிமன்றம் உத்தரவிடவேண்டும்."

இவ்வாறு தனது ஆட்கொணர்வு மனுவில் குறிப்பிட்டுள்ள ஸ்ரீபதி, தமது மனுவில், யாழ். பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி திரு. பெரஸ் பெரேரா, இரகசிய பொலிஸ் பிரிவு அத்தியட்சகர் திரு. ராஜபக்ஷ, பொலிஸ் மா அதிபர் திரு. ஸ்டான்லி சேனநாயகா ஆகிய மூவரையும் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளனர்.

கலாபதியை உடனடியாக நீதிமன்றத்துக்குக் கொண்டுவரும்படி கட்டளையிடவேண்டுமென்றும், சட்டவிரோதமாக கலாபதி பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்படுவதிலிருந்து விடுதலை செய்யவேண்டுமென்றும் இம்மனுவில் கோரப்பட்டிருந்தது. (ம)

## தவறிவிட்டது

23-ந் திகதி முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணம் வந்த பஸ்ஸில், சூட்கேஸ் ஒன்று மாறிவிட்டது. உரியவர் மாறிய சூட்கேஸை யாழ்ப்பாண டிப்போவில் ஒப்படைத்து உரிய சூட்கேஸைப் பெற்றுக்கொள்ளவும். 9382

## வவுனியாவில் கைதான 11 இளைஞர்களும் இன்று நீதவான்முன் ஆஜர்

[யாழ்ப்பாணம்]
வவுனியா கண்ணாட்டியில், சந்தேகத்தின்பேரில் கைதான யாழ். வளாக விஞ்ஞானப் பிரிவு மாணவன் வி. குணசேகரமும், மற்றும் 11 பேரும் இன்று காலை வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படுவார்கள்.

இவர்கள் கண்ணாட்டி அகதிகள் முகாம் வேலையில் ஈடுபட்டிருந்தசமயம் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இன்று, அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு. கே. ஸி. நித்தியானந்தாவும், கைதான மாணவர்களின் பெற்றோர்களும் வவுனியா நீதிமன்றத்தில் சமுகமளித்திருப்பார்கள்.

இவர்களைப் பிணையில் விடுமாறு கோரும் ஒரு விண்ணப்பத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் சட்டத்தரணிகள் மூலம் பெற்றோர்கள் செய்துள்ளனர்.

யாழ் வளாக மாணவர் தலைவர் திரு. சே. ஜெயபாலன் தலைமையில் ஒரு மாணவர் கோஷ்டியும் இன்று நீதிமன்றத்தில் சமுகமளித்திருக்கும்.

இந்த 12 பேர்களில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியைச் சேர்ந்த உயர் வகுப்பு மாணவரான பவானந்தன், வண்ணை வித்தியாலய உயர் வகுப்பு மாணவர் கைலாயநாதன் மற்றும் மலைநாட்டுத் தமிழ் இளைஞர்களும் இடம் பெற்றுள்ளனர். [உ]

## மனிதாபிமான—

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தி எடுப்பவன் வீரனல்ல எந்தத் துன்பம் வந்தாலும் பொறுத்துக் கொள்ளுகின்ற நிலைதான் வீரம் அப்படிப்பட்ட நிலையே சிறந்த வீரனாக எண்ணப்படுகிறது.

எல்லா மனிதரையும் ஒன்றாகக் காணுகின்ற பண்பு நம்மிடத்தில் இல்லையென்றால் நாம் கல்வி கற்றதன் பயன் என்ன? உன்னைத் தூய்மைப்படுத்திக்கொண்டு அதாவது உன் உள் மனதினைத் தூய்மைப்படுத்தி அதன் மூலம் தெய்வத்தன்மையினை நீ அடையலாம. வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்று வள்ளுவர் சொன்னார். எனவே மனிதன் தன் உள்ளுறை மனிதாபிமானம், கருணை அன்பு என்பவற்றை வளர்ப்பதன் மூலம் இதம்பெறலாம்" என்றார்.

இக்கருத்தரங்கிற்கு வளாகத் தலைவர் திரு. சு. வித்தியானந்தன் தலைமை தாங்கினார். தமிழ்த்துறைப் பேராசிரியர் திரு. சண்முகதாஸன் நன்றிதெரிவித்துப் பேசினார். (கா-உ)

## இந்திரா...

[1-பக்கத்தொடர்ச்சி]

ஆசைத்தம்பி, தென்னரசு, பி. யு. சண்முகம், ஆற்காடு வீராசாமி ஆகியவர்கள் மீதும் குற்றப்பத்திரிகை தாக்கல்செய்யப்பட்டது.

கடந்த அக்டோபர்மாதம் 29, 30ம் திகதிகளில் திருமதி இந்திராகாந்தி தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்தபொழுது கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் என்ற பெயரில் அமைதிக்குப் பங்கம் விளைவித்ததாகவும் ஆயுதங்களை ஏந்திக்கொண்டு ஊர்வலம் சென்றதாகவும், பொலிசாருக்கு காயம் விளைவித்ததாகவும் ரயில்வே சொத்துக்களுக்கும் அரசாங்க சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததாகவும் தீயிடுவதில் ஈடுபட்டதாகவும் இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

டாக்டர்
T. P. தாமோதரம்

சங்கத்தானை - சாவகச்சேரியைச் சேர்ந்த டாக்டர் T. P. தாமோதரம் அவர்கள் அகால மரணமானார். ஈமக்கிரியைகள் இன்று மாலை 4 மணிக்கு சாவகச்சேரியில் அவரது இல்லத்தில் நடைபெறும். 9383

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் ... வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மே மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanadu P. O. Box 49, Jaffna; Telegram "Eenaadu" Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.